மகளிர் தினத்தை முன்னிட்டு

# மெட்ரோ ரெயில் நிலையங்களில் இலவச மருத்துவ முகாம்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வருகிற 8-ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) வடபழனி, ஷெனாய் நகர், விமான நிலையம், ஆலந்தூர், அசோக்நகர், சென்ட்ரல் ஆகிய 6 மெட்ரோ ரெயில் நிலையங்களில் இலவச மருத்துவ முகாம் நடைபெறுகிறது. இந்த முகாமை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், உடல்நலம் மற்றும் உயிரியல் தொழில் துறை அமைப்பு ஆகியவை இணைந்து நடத்துகின்றன. அன்று காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையிலும் மருத்துவ முகாம் நடைபெறுகிறது. இதில் பி.எம்.ஐ. (உயரம், எடை) ரத்த அழுத்தம், ரத்த சர்க்கரை பரிசோதனை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.